**SAVINGS**

AIA SAVINGS PLUS GOLD

# உங்களது மனஅமைதிக்கான ‘பிளஸ்’



HEALTHIER, LONGER, BETTER LIVES

aialife.com.lk

எமது கனவுகளை நனவாக்கும் நம்பிக்கையில் நாம் அனைவரும் சேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்கின்றோம். AIA SavingsPlusGold சேமிப்புத் திட்டத்தின் மூலம் உங்களையும் நீங்கள் நேசிப்பவரையும் பாதுகாக்கும் பலதரப்பட்ட காப்புறுதி அனுகூலங்களைக் கொண்ட திட்டம் அறிமுகம் செய்யப்படுகின்றது. தற்பொழுது, உங்களதும், உங்களின் குடும்பத்தினதும் எதிர்காலத்திற்கென சேமிப்பை மேற்கொள்வதோடு அவர்களது பாதுகாப்பு அனுகூலங்களை உறுதி செய்து கொள்வதோடு கடுமையான சுகயீனம், வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறல், சத்திர சிகிச்சை போன்ற பல அனுகூலங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

## AIA SavingsPlusGold திட்டத்தின் தனித்துவம் யாது?

- உங்களுக்குப் பொருத்தமான ஆயுள் காப்புறுதி
- பாரதூரமான நோய், வைத்தியசாலையில் தங்கியிருத்தல், சத்திரசிகிச்சை ஆகியவற்றை உள்ளடக்கும் வகையில் உங்களுக்கும் உங்கள் வாழ்க்கைத்துணைக்கும் பிள்ளைகளுக்கும் வைத்திய மற்றும் பாதுகாப்பு அனுகூலங்கள்
- வருடாந்தம் உத்தரவாதமளிக்கப்பட்ட பங்கிலாப வீதம்
- உங்களது சேமிப்புக்களுக்கு பணவீக்கத்திலிருந்து பாதுகாப்பு
- உங்களது தற்போதைய சேமிப்பு நிதியத்தை ‘அதிகரிக்கும்’ சக்தி
- காப்புறுதி கொடுப்பனவுக் காலத்தினுள் ஓர் தடவை நிதியத்தின் 15% வரை மீளப்பெறுவதற்கான சந்தர்ப்பம்
- உங்களது மாதாந்த வருமானத்தைப் பாதுகாப்பதற்கான வாய்ப்பு

## பங்கிலாபத்துடன்கூடிய AIA SavingsPlusGold

பிரகடனப்படுத்தப்பட்ட பங்கிலாப வீதம் (கட்டணங்கள் கழிக்கப்பட்ட) அல்லது வருடாந்த உத்தரவாதப்படுத்தப்பட்ட மீள்கொடுப்பனவு வீதம் (கட்டணங்கள் கழிக்கப்பட்ட) என்பவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் தொடர்ச்சியான வளர்ச்சியை நிச்சயிக்கும் ஒப்பற்ற பங்கிலாபத் திட்டத்தினை AIA SavingsPlusGold வழங்குகின்றது.

எந்தவொரு காப்புறுதிதாரரும், ஒதுக்கீட்டு வீதத்தை சீராக்கிய மற்றும் அத்தியாவசியக் கட்டணங்கள் கழிக்கப்பட்ட அடிப்படைக் கட்டுப்பணத்தைக் பற்றுவைக்கும் தனியான முதலீட்டு கணக்கை கொண்டிருப்பர். (உதாரணம்: ஆயுள் காப்புறுதிக்கான நிர்வாகக் கட்டணம் போன்ற கட்டணங்கள்)

உங்களது முதலீட்டுக் கணக்கில் பங்கிலாபம் சேர்க்கப்படுவதன் மூலம் உங்களது நிதியப்பெறுமதி தொடர்ச்சியாக வளர்ச்சியடைவதனால் உச்சக்கட்ட முதிர்ச்சிப் பெறுமதியை நீங்கள் பெறுவதற்கு வழிவகுக்கின்றது.

## உங்களுக்கு பொருத்தமான ஆயுள் காப்புறுதி

உங்களின் தேவைகளுக்கு பொருந்தங்கூடிய ஆயுள் காப்புறுதித் திட்டத்தினை AIA SavingsPlusGold வழங்குகின்றது.

## விசுவாச வெகுமதி (Loyalty Reward)

உங்களது 10வது காப்புறுதி ஆண்டு பூர்த்தியின் போது உங்களின் வருடாந்த அடிப்படை கட்டுப்பணத்தை போன்ற 350% தொகையை விசுவாச வெகுமதியாக பெறுவீர்கள், இதற்காக நீங்கள் அனைத்து கட்டுப்பணங்களையும் 180 நாட்களுக்குள் தொடர்ச்சியாக செலுத்தி வந்திருத்தல் வேண்டும்.

## உங்களது சேமிப்பு நிதியம் எவ்வாறு வளர்ச்சியடையும்?

2017 ஆம் ஆண்டில் 30 வயதுடைய தனி நபர், AIA SavingsPlusGold திட்டத்தினை வருடாந்த அடிப்படை கட்டுப்பணமாக ரூ. 50,000 அல்லது ரூ. 100,000 ஆக பெற்று மற்றும் கட்டுப்பணத்தினை போன்று 15 மடங்கு பெறுமதியான ஆயுள் காப்புறுதியுடன் பெற்றிருந்தால் உங்களது உத்தேச சேமிப்பு நிதியப் பெறுமதி பின்வரும் முறையில் அமைந்திருக்கும்.

| வருடாந்த அடிப்படைக் கட்டுப்பணம் | உத்தேச சேமிப்பு நிதியம் | | |
|---|---|---|---|
| | 4% வருடாந்தம் | 8% வருடாந்தம் | 12% வருடாந்தம் |
| 50,000 | 1,415,164 | 1,845,706 | 2,430,992 |
| 100,000 | 2,840,890 | 3,705,330 | 4,880,527 |

*பெறுமதி இலங்கை ரூபாவில்*

அட்டவணையில் காட்டப்பட்ட அனுமானிக்கப்பட்ட பெறுமதிகளானவை 4%, 8% மற்றும் 12% எனும் உத்தேசிக்கப்பட்ட பங்கிலாப அடிப்படையிலும் வருடாந்த பணவீக்க வீதமானது 5% மாக உள்ளதாகவும் அனுமானிக்கப்பட்டு, உரிய கட்டணங்கள் உள்ளடக்கியவாறு கணிக்கப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட உத்தேச பங்கிலாப வீதங்கள் உத்தரவாதமளிக்கப்பட்டவையல்ல என்பதுடன், நீங்கள் பெறக்கூடிய அதிகபட்ச அல்லது குறைந்தபட்ச எல்லையையும் குறிக்கப்படமாட்டாது.

முதிர்வின் போது, ஆயுள் காப்புறுதிப் பெறுமதியானது மொத்த சேமிப்பு நிதியத் தொகையாகும். முதிர்வின்போது ஆயுள் காப்பீடு முடிவுக்கு வருகின்ற போதிலும், முதிர்வுத் திகதிக்கு அப்பாலும் உங்களது சேமிப்பு நிதியத்தை தொடர்ந்து பேணும் தெரிவு உங்களுக்கு உண்டு.

## உங்கள் சேமிப்புத் திட்டத்தின் மேலதிக பிரதிபலன்கள்

### பணவீக்கப் பாதுகாப்பு

உங்களது சேமிப்பு நிதியத்தை பணவீக்கத்தில் இருந்து பாதுகாக்கவென இது உருவாக்கப்பட்டுள்ளது.

பணவீக்கப்பாதுகாப்பினை நீங்கள் 0%, 5%, 10% மற்றும் 15% என தெரிவு செய்யலாம்.

அடிப்படைக் கட்டுப்பணம் தெரிவு செய்த பணவீக்கப் பாதுகாப்பு மற்றும் அடிப்படைக் கட்டுப்பண பாதுகாப்பு அனுகூலம் (பெற்றிருந்தால்) என்பனவற்றால் வருடாந்தம் அதிகரிக்கப்படும். பின்னரும் தொடர்ந்தும் குறித்தவிதமாக வருடாந்தம் அதிகரிக்கப்படும்.

## கட்டுப்பணத்திற்கு மேலதிகமான செலுத்துகை

காப்புறுதி கொடுப்பனவுக்காலத்தின் போது உங்களது வழமையான கட்டுப்பணத் தொகைக்கு மேலதிகமாக நிதியைச் செலுத்தி உங்கள் சேமிப்பு நிதியத்தை அதிகரிக்கலாம். எந்த நேரத்திலும் இதனை செலுத்தலாம். ஆனால், இந்த தொகை ரூபா 10,000 க்கு குறைவாக இருக்கக் கூடாது.

## எதிர்பாராத சம்பவம் நிகழுமானால்?

எதிர்பாராத வகையில் உங்களது மரணம் ஏற்படுமானால் உங்கள் வாழ்க்கைத்துணை அல்லது உங்களில் தங்கியிருப்பவர்கள் காப்புறுதித் தொகை அல்லது நிதிய பெறுமதி இவற்றில் எது கூடியதோ அந்த தொகையுடன் கோரப்பட்ட மேலதிக அனுகூலங்களையும் பெறுவார்கள்.

## ஏனைய தகவல்கள்.

- நுழைவு வயது: (அடுத்த பிறந்த தினத்தின் போது) 19-60 முதிர்வு வயது 75 வருடங்களுக்கு மேற்படக்கூடாது.
- காப்புறுதிக் காலவரை: 10-30 வருடங்கள்
- ஆகக்குறைந்த ஆயுள் காப்புறுதி: ரூபா 150,000
- உங்களின் கட்டுப்பணத்தினை மாதாந்தம், காலண்டு, அரையாண்டு மற்றும் வருடாந்த அடிப்படையில் செலுத்தலாம்.

## பிரயோகிக்கப்படும் கட்டணங்கள்

### ஒதுக்கீட்டுக் கட்டணம்.

| காப்புறுதி வருடம் | 1ஆம் வருடம் | 2ஆம் வருடம் | 3ஆம் வருடத்தில் இருந்து |
|---|---|---|---|
| அடிப்படைக் கட்டுப்பணத்தில் ஒதுக்கீட்டு கட்டணம் | 70% | 55% | 0% |
| மேலதிக செலுத்துகைக்கான ஒதுக்கீட்டு கட்டணம் | ஒவ்வொரு மேலதிக செலுத்துகைக்கும் 4% | | |

### கையளிப்பு அபராதம்

| காப்புறுதி வருடம் | 1ஆம் வருடம் | 2ஆம் வருடம் | 3ஆம் வருடம் | 4ஆம் வருடத்தில் இருந்து |
|---|---|---|---|---|
| கையளிப்பு பெறுமதி | 100% | | | 75% தொடக்கம் 0%* வரை |

* காப்புறுதி நிபந்தனைக்கு அமைய குறைவடையும்

### திட்ட நிர்வாகக் கட்டணம்:

2017 ம்ஆண்டிற்கு LKR 265.74 மேலும்தொடர்ந்து வருகின்ற ஒவ்வொரு ஆண்டுகளிலும் ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து ஆண்டுக்கு 10% தால் அதிகரிக்கும்.

### நிதிய முகாமைத்துவக் கட்டணம்:

மீதி - முதலீட்டுக் கணக்கில், ஆண்டுக்கு 0.75%

### மரணத்திற்கான கட்டணம்:

இது அடிப்படை காப்புறுதித் தொகையின் காப்பிற்கு ஏற்படும் செலவினமாகும்.

### மாதிரிக் கட்டணம்:

மாதாந்தக் கட்டுப்பண முறைக்கு மாத்திரமே 4% ஏற்புடையது.

## இத்திட்டமானது செயலிழப்பின் என்ன நிகழும்?

முதல் 3 காப்புறுதி வருடங்களில் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள 30 நாள் சலுகைக் காலத்தினுள் உங்களது கட்டுப்பணத் தொகையை நீங்கள் செலுத்தாவிடின் இத்திட்டம் செயலிழப்பதுடன், இக் காப்புறுதியின் கீழ் எந்தவொரு அனுகூலத்தினையும் நீங்கள் பெறமாட்டீர்கள். எவ்வாறாயினும், காப்புறுதி நிபந்தனைகளுக்கு உட்பட்ட வகையில் காப்புறுதியை மீள் செயற்படுத்தும் வாய்ப்பு உங்களுக்கு உள்ளது.

3 வருடங்களுக்கு அல்லது அதற்குக் கூடிய காலத்திற்கு நீங்கள் கட்டுப்பணத்தைச் செலுத்தி காப்புறுதித் திட்டத்தைத் தொடர்ந்திருந்தால், தேவையேற்படும் பட்சத்தில், உங்கள் காப்புறுதித் திட்டத்தைக் கையளிப்புச் செய்து இதற்கான ரொக்கப்பணத்தைப் பெற முடியும். இவ்வாறு செய்வதன் மூலம் பெருமளவு அபராதத் தொகையைச் செலுத்த வேண்டி நேரிடுவ தோடு,

இதற்குப் பதிலாக, முதிர்வுப் பெறுமதி மற்றும் ஆயுள் காப்பீடின்றி உங்கள் நிதியத்தை வளர விடலாம்.

# மேலதிக அனுகூலங்கள்

### விபத்து அனுகூலம்
விபத்தினால் ஏற்படும் மரணத்திற்கு மேலதிக ஆயுள் காப்புறுதி வழங்கப்படுகிறது. நிரந்தர அங்கவீனம் ஏற்படும் சமயத்திலும் நிதியுதவியினைப் இவ் அனுகூலம் வழங்கும். (அங்கவீனத்தின் தன்மையின் அடிப்படையில் இந்தத் தொகை தீர்மானிக்கப்படும்)

### வைத்தியசாலையில் தங்கும் அனுகூலம்
வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 3 நாட்கள் கடந்த நிலையில் முதல் நாளிலிருந்து தினமும் ரூபா 10,000 வரை நாளாந்த ரொக்கப்பண அனுகூலம் வழங்கப்படுகிறது. தீவிர சிகிச்சைப் பிரிவில் நீங்கள் அனுமதிக்கப்பட்டிருந்தால், இத்தொகை இருமடங்காகும் இவ்வனுகூலத்தினை உங்களது வாழ்க்கைத்துணை மற்றும் பிள்ளைகளுக்கும் நீடிக்கலாம்.

### வைத்தியசாலை செலவின ஆவரணம்
இலங்கையில் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் ஏற்படும் மருத்துவ செலவினங்களை மீள்ஈடு செய்து கொள்ள வாய்ப்பு அளிக்கின்றது. (இவ்வனுகூலம் கட்டுப்பணப் பாதுகாப்பு அனுகூலத்தில் உள்ளடக்கப்படவில்லை)

### பராயமடைந்தோருக்கான சத்திர சிகிச்சை அனுகூலம்
உங்களுக்கோ அல்லது உங்கள் வாழ்க்கைத்துணைக்கோ அட்டவணைப்படுத்தப்பட்ட 250 சத்திர சிகிச்சைகள் இலங்கை, இந்தியா மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளில் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் நிதியுதவி வழங்கப்படும்.

### கட்டுப்பணப் பாதுகாப்பு அனுகூலம்
முழு அளவிலான நிரந்தர அங்கவீனம் ஏற்படுமிடத்து கட்டுப்பணக் கொடுப்பனவுகள் விலக்கப்படும். இருந்த போதிலும், உங்களது காப்புறுதி மூலம் உறுதியளிக்கப்பட்ட சகலவித அனுகூலங்களையும் நீங்கள் தொடர்ந்து பெறுவீர்கள்.

### பாரதூரமான நோய்களுக்கான காப்பீட்டு அனுகூலம்
உங்களுக்கு அல்லது வாழ்க்கைத்துணைக்கு அட்டவணைப்படுத்தப்பட்ட 22 பாரதூரமான நோய் ஏற்படும் பட்சத்தில் அதற்கான நிதியுதவி வழங்கப்படும். ஆகக்கூடுதல் தொகையாக ரூபா 3 மில்லியன் வரை காப்பீட்டைத் தெரிவு செய்யலாம்.

### வருமான பாதுகாப்பு அனுகூலம்
காப்புறுதி கொடுப்பனவுக் காலத்தில் எதிர்பாராத விதமான உங்களது மரணம் அல்லது முழு அளவிலான நிரந்தர அங்கவீனம் ஏற்படின், ஆகக்கூடியதாக 10 வருடங்களுக்கு உங்களில் தங்கியிருப்பவர்களுக்கு மாதாந்த வருமானம் வழங்கப்படும்.

### வாழ்க்கைத்துணைக்கான ஆயுள் காப்புறுதி
உங்களது காப்புறுதி ஒப்பந்தத்தின் மூலம் உங்களது வாழ்க்கைத்துணைக்கும் ஆயுள் காப்புறுதி வழங்கப்படும்.

### குழந்தை சுகாதார பாதுகாப்பு அனுகூலம்
அட்டவணைப்படுத்தப்பட்ட 250 சத்திர சிகிச்சைகள் இலங்கை, இந்தியா மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளில் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் நிதியுதவி வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுமிடத்து ரொக்கப்பணமும், 12 வயதுக்குட்பட்ட சிறுவருடன் பெற்றோரில் ஒருவர் தங்கியிருப்பின் விசேட கொடுப்பனவும் வழங்கப்படும்.

ஆயுள் காப்புறுதிதாரர் காப்புறுதி உரிமையாளர் அல்லாதவிடத்தில், இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் அனுகூலங்கள் காப்புறுதி உரிமையாளருக்கே உரித்தாகும். எனினும், காப்பீடுகள் காப்புறுதிதாரருக்கானவையாகும்.

இவ்வெளியீடானது ஒரு சாராம்சம் மாத்திரமே ஆகும். முழுமையான விபரங்களுக்கு தயவுசெய்து ஆயுள் காப்புறுதிப் பத்திரத்தைப் பார்க்கவும்.

SPG - 100002713
V4 - 06/18

# AIA பற்றி

AIA குழுமம் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் முன்னணி ஆயுள் காப்புறுதி வழங்குநர் ஆகும்.



1919
சீனா

1931
ஹொங்கொங்

1931
சிங்கப்பூர்

1938
தாய்லாந்து

1947
பிலிப்பீன்ஸ்

1948
மலேசியா

1957
புருணே

1972
அவுஸ்திரேலியா

1981
நியூஸீலாந்து

1982
மக்காவு

1984
இந்தோனேசியா

1987
கொரியா

1990
தாய்வான்

2000
வியட்னாம்

2001
இந்தியா

2012
இலங்கை

2013
மியன்மார்*

2015
கம்போடியா

*AIA மியன்மாரிலும் பிரதிநிதித்துவ அலுவலகத்தைக் கொண்டுள்ளது.

**US$1 டிரில்லியனுக்கும்**
அதிகமான காப்பீட்டுத் தொகை

ஆசிய வரலாற்றில் **100 ஆண்டுகளுக்கு அண்மித்த** அனுபவம்

**உலகளாவிய 18 சந்தைகள்**

**30 மில்லியனுக்கும்** அதிகமான தனிப்பட்ட காப்புறுதிகள்

**16 மில்லியனுக்கும்** அதிகமான குழுமக் காப்புறுதி அங்கத்தவர்கள்

AIA Insurance Lanka PLC (Co.No.PQ 18) இனால் வெளியிடப்பட்டது. 06/2018

HEALTHIER, LONGER, BETTER LIVES

AIA இன்ஷூவரன்ஸ் லங்கா PLC
(Co.No.PQ 18)
AIA டவர், 92, தர்மபால மாவத்தை, கொழும்பு 07
தொலைபேசி: 011 2310310
தொலைநகல்: 011 4715892
மின்னஞ்சல்: lk.info@aia.com